1994 மே 2]

இடங்களில் ஆரம்பித்து இருக்கிறார்கள். ஏழையெளிய மக்கள் கல்வித்திறத்தில் முன்னேற்றம் காண இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள் என்பதை நாடு அறியும், நல்லவர்கள் அறிவார்கள். ஆகவே நான் கருத்துருவைப் பெற்று அனுப்புகிறேன். அருள்கூர்ந்து இந்த ஆண்டு 4 பள்ளிகள், இதையும் சேர்த்துச் செய்து கொடுப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-95-ல் தொடக்கப்பள்ளிகள் தொடங்குவதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கருத்துரு வரப்பெற்றால், அடுத்த நிதி ஆண்டில், அது பரிசீலிக்கப்படலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 474, திரு கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

474—

பர்கூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

*** 19971—திரு. கே. முனிவெங்கடப்பன்:***

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, பர்கூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1994 மே 2

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் தொகுதி, கேட்பாரற்று இருந்த அந்தத் தொகுதியை இன்று இந்திய வரைபடத்திலே ஒரு முக்கியமான தொகுதியாக மாற்றி வருகின்ற இதய தெய்வம், புரட்சித் தலைவி ஆட்சியிலே, அந்தத் தொகுதியில் நிறைய உயர்நிலைப் பள்ளிகளை, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஒரு மகளிர் கல்லூரியைக் கொடுத்திருக்கிறார்கள். பல தொழிற்சாலைகளை உருவாக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நன்மைகளை எல்லாம் செய்து வருகின்ற அந்தத் தொகுதியிலே அந்தத் தொகுதியின் மையமாக அமைந்திருக்கிற பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றவேண்டும் என்று அங்குள்ள மக்கள் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அடுத்த ஆண்டாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று உறுப்பினர் சொல்கிறார். ஆனால் கருத்துரு வரப்பெறவில்லை. கருத்துரு வரப்பெற்றால், உயர்மட்டக் குழு அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, தக்க முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதி மக்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவியை தெய்வமாக இன்றைக்கு மதித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பணம் கட்டவேண்டும் என்பதற்காக, பணத்தை ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிதி ஆண்டிலே பணத்தைக்கட்டிவிட்டு, அவர்கள் கேட்கும்போது, அடுத்த நிதி ஆண்டில் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அதேசமயத்தில் அந்தப் பள்ளியிலே கம்ப்யூட்டர் வகுப்புகள் நடைபெறவேண்டும் என்று அங்கேயிருக்கிற மக்கள் விரும்புகிறார்கள். காரணம், அங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அந்தக் கல்லூரியிலே நவீன வகுப்புகள் என்று சொல்லப்படுகின்ற, பி.எஸ்.சி. கம்ப்யூட்டர், பி.எஸ்.சி. கோவாப்பரேடிவ்ஸ், கெமிஷ்ட்ரி போன்ற நல்ல வகுப்புகளை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவியர்கள் அந்தக் கல்லூரியிலே சேர்ந்து படிக்கின்றபோது, அந்த வகுப்புகள் இருக்கவேண்டும் என்று விரும்புகிற காரணத்தால், கம்ப்யூட்டர் வகுப்பை அந்தப் பள்ளிக்குக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 மே 2]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபந்தனைகளை நிறைவேற்றிய, உரிய கருத்துரு விரைவிலே கிடைக்கப்பெற்றால், இந்த ஆண்டிலே அதைப் பரிசீலிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க. அதிலே கம்ப்யூட்டர் சையின்ஸ் பாடப் பிரிவைத் தொடங்குவதற்கான ஏற்பாடு குறித்த கருத்துரு உரிய முறையிலே வரப்பெறும்போது அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *475*, திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

475—

காரைக்குடியில் லாரிகளை நிறுத்துவதற்குத் தனி இடம் அமைத்தல்.

**** 20106—திருமதி கற்பகம் இளங்கோ:***

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடியில் லாரிகளை நிறுத்துவதற்கெனத் தனி இடம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : காரைக்குடி நகர் வ.உ.சி. சாலையில் ந. அ. எண். *944*, வார்டு எண். *1* பிளாக் *10*, அரசு புறம்போக்கு கண்மாய் இடத்தில் ஒரு ஏக்கர் இடத்தை லாரிகள் நிறுத்துவதற்கான இடமாகத் தேர்வு செய்து அந்த இடத்தை உரிமை மாற்றம் செய்ய பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட ஆட்சித் தலைவரைக் கோரி காரைக்குடி நகராட்சி ஆணையாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி நகரம் பல்வேறு கிராமங்களின் மையப் பகுதியாகவும், பல முக்கிய நகரங்களின் இணைப்புப் பாதையாகவும் அங்கே லாரி உரிமையாளர்களும், உபயோகதாரர்களும் அதிகமான